සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2020

**புவியியல்** / භූගෝල විද්‍යාව- **II** தரம் : 10 நேரம்: 2 மணித்தியாலம்


- ♦ இவ்வினாப்பத்திரம் பகுதி I, II, III என அமைந்துள்ளது
- ♦ முதலாம் வினா கட்டாயமானது. அதில் அ, ஆ, இ ஆகிய பகுதிகள் மூன்றுக்கும் விடையளிக்க வேண்டும்.
- ♦ **பகுதி II ல் இரண்டு வினாக்களுக்கும் பகுதி III ல் இரண்டு வினாக்களுக்கும் விடையளிக்குக.**
- ♦ **எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி - I

*1.* அ) i) இடவிளக்கப்படமொன்றின் 4 $cm^2$ இனால் காட்டப்பட்டுள்ள நிலப்பரப்பொன்றின் பரப்பளவு யாது? *(1 புள்ளி)*

ii) *1 : 50, 000* இடவிளக்கப்படமொன்றில் வடக்குப் பகுதியை காட்ட பயன்படும் முறையை வரைந்து காட்டுக. *(2 புள்ளி)*

iii) கீழே காணப்படும் சட்டகத்தில் x எழுத்தால் காட்டப்பட்டுள்ள இடத்தின் மெற்றிக் ஆள் கூற்றுப் பெறுமதியை குறிப்பிடுக. *(2 புள்ளி)*





ஆ) i) *1 : 50, 000* இடவிளக்கப்டமொன்றில் அளவுத்திட்டத்தை காட்டும் இரு முறைகளை குறிப்பிடுக. *(2 புள்ளி)*

ii) இலங்கையின் *1 : 50, 000* இடவிளக்கப்படமானது எந்த எறியத்தை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டுள்ளது. *(1 புள்ளி)*


iii) பொருத்தமான நிறத்தையும் அடையாளத்தையும் பயன்படுத்தி 2 $km^2$ பரப்புள்ள வயல் நிலமொன்றை வரைந்து காட்டுக. *(2 புள்ளி)*

ஆ) உமக்கு தரப்பட்டுள்ள உலகப்படத்தை நன்கு அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.



i) A,B,C எழுத்துக்களில் அமேசன் காட்டை காட்டும் எழுத்து யாது?
ii) D,E,F எழுத்துக்களில் தஸ்மேனியா தீவை காட்டும் எழுத்து யாது?
iii) G,H,J எழுத்துக்களில மெக்சிகோ குடாவை காட்டும் எழுத்து யாது?
iv) K,L,M எழுத்துக்களில் யூரல்மலைத்தொடரை காட்டும் எழுத்து யாது?
v) P,Q,R எழுத்துக்களில் விக்டோரியா ஏரியை காட்டும் எழுத்து யாது? *(5 புள்ளி)*

இ) உமக்கு தரப்பட்டுள்ள இலங்கைப்படத்தை பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.




i) A,B,C எழுத்துக்களில் நெல் ஆராய்ச்சி நிலையமான மகாஇலுப்பல்லமையை காட்டும் எழுத்து எது?

ii) D,E,F எழுத்துக்களில் பாற்பண்ணைத் தொழில் இடம்பெறும் நுவரெலியா பிரதேசத்தை காட்டும் எழுத்து எது?


iii) J,K,L ஆகிய எழுத்துக்களில் மீன்களை காய்ச்சும் கல்முனைப் பிரதேசத்தை காட்டும் எழுத்து எது?

iv) M,N,O ஆகிய எழுத்துக்களில் இலங்கையில் படகு கட்டும் பாணந்துறை பிரதேசத்தை காட்டும் எழுத்து எது?

v) P,Q,R ஆகிய எழுத்துக்களில் மொரகஹகந்த நீர்ப்பாசண திட்டம் அமைந்துள்ள மாவட்டத்தை காட்டும் எழுத்து எது?

*(5 புள்ளி)*

2. i) கீழே படத்தில் இல 01 மற்றும் 02 இனால் காட்டப்பட்டுள்ள இரு இடங்களையும் குறிப்பிடுக. *(2 புள்ளி)*





ii) (a) கண்டமேடை எனப்படுவது யாது? *(2 புள்ளி)*
(b) ஒரு நாடு தீவாக இருப்பதனால் கிடைக்கும் ஒரு நன்மையை குறிப்பிடுக. *(1 புள்ளி)*

iii) (a) ஆழமான சமுத்திரத்தில் எரிமலைச் செயற்பாடுகள் காரணமாக உருவான தீவுகள் இரண்டை குறிப்பிடுக. *(2 புள்ளி)*
(b) மலைப் பிரதேசங்களில் மானிட செயற்பாடுகள் இரண்டை குறிப்பிடுக. அதில் ஒன்றை விளக்குக. *(3 புள்ளி)*




kalvi.lk

3. புவியிலிருந்து மேலே செல்லும் வளிமண்டலத்தின் படை அமைப்பை பின்வரும் படம் காட்டுகின்றது.




   i) படத்தில் B மற்றும் C இனால் காட்டப்படும் படைகளை பெயரிடுக. (2 புள்ளி)
   ii) வளிக்கோளத்தில் காணப்படும் மாறன் மண்டலத்தின் பண்புகள் மூன்றை குறிப்பிடுக. (3 புள்ளி)
   iii) (a) புவியில் நீர் காணப்படும் 3 வடிவங்களுள் இரண்டு வடிவங்களை குறிப்பிடுக. (2 புள்ளி)
   (b) தற்காலத்தில் நீரின் தரத்தை குறைவடையச் செய்யும் மானிட நடவடிக்கைகள் இரண்டை குறிப்பிடுக. அதில் ஒன்றை சுருக்கமாக விளக்குக. (3 புள்ளி)

4. உலகின் அகலக்கோடுகளை காட்டும் மாதிரிப்படமொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.




   i) இம்மாதிரி பூகோளத்தில் A மற்றும் C ஆகிய எழுத்துக்களால் குறிப்பிடப்படும் காலநிலை வலயங்கள் இரண்டையும் பெயரிடுக. (2 புள்ளி)
   ii) (a) B எழுத்தால் காட்டப்படும் வலயத்தில் காணப்படம் கால நிலை வகையை குறிப்பிடுக. (1 புள்ளி)
   (b) நீர் மேலே குறிப்பிட்ட காலநிலை வகை நிலவும் நாடுகள் இரண்டை குறிப்பிடுக. (2 புள்ளி)
   iii) இக்கால நிலை வலயங்களுள் 18 °C விட அதிகமான வெப்பநிலை, வருடம் பூராகவும் உயர்ந்த வெப்பநிலை நிலவும் வலயத்தை குறிப்பிட்டு அவ்வலயத்தில் காணக்கூடிய மேலும் பல விஷேட காலநிலை பண்புகளில் இரண்டை குறிப்பிடுக. (5 புள்ளி)

5. i) ஆசியாவுக்கு வெளியில் நெல் உற்பத்தி நடைபெறும் நதிக்கரைகள் இரண்டை குறிப்பிடுக. (2 புள்ளி)
   ii) நெற்செய்கைக்கு சாதகமான பௌதிக காரணிகள் இரண்டையும் மானிடக் காரணிகள் ஒன்றையும் குறிப்பிடுக. (3 புள்ளி)
   iii) (a) உலகில் கோதுமை உற்பத்தியின் விருத்திக்கு சாதகமான காரணிகள் இரண்டை குறிப்பிடுக. (2 புள்ளி)
   (b) கோதுமை பயிர்செய்கையின் விஷேட பண்புகள் இரண்டை குறிப்பிட்டு அதில் ஒன்றை சுருக்கமாக விளக்குக. (3 புள்ளி)


6. i) கீழே காட்டப்பட்டுள்ள பெருந்தோட்டப் பயிர்கள் அதிகம் பரம்பிக்காணப்படும் மாவட்டங்கள் ஒவ்வொன்றை குறிப்பிடுக. (2 புள்ளி)
   தேயிலை
   இறப்பர்
   ii) இலங்கையில் இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடத்தை குறிப்பிட்டு இறப்பர் உற்பத்திக்கு சாதகமான பௌதிகக் காரணிகள் இரண்டை குறிப்பிடுக. (3 புள்ளி)
   iii) (a) இலங்கையின் தேயிலையை கொள்வனவு செய்யும் பிரதான நாடுகள் 2 ஐக் குறிப்பிடுக. (2 புள்ளி)
   (b) தேயிலை செய்கையை விருத்தி செய்வதால் இலங்கையின் பொருளாதாரத்திற்கு கிடைக்கும் நன்மைகள் மூன்றை குறிப்பிடுக. (3 புள்ளி)



kalvi.lk

7. i) உலகில் இரும்புருக்கு கைத்தொழில் விருத்தியுற்றிருப்பதற்கு காரணமான இரும்புருக்கில் அடங்கியுள்ள பண்புகள் இரண்டை குறிப்பிடுக. *(2 புள்ளி)*

ii) a) கீழே படத்தில் A எழுத்தால் காட்டப்பட்டுள்ள இரும்புருக்கு உற்பத்திக்கு பிரசித்தி பெற்ற நாட்டை பெயரிடுக. *(1 புள்ளி)*





b) நீர் பெயரிட்ட நாட்டின் இரும்புருக்கு கைத்தொழில் அமைவுபெறுவதில் செல்வாக்கு செலுத்திய பிரதான காரணிகள் இரண்டை குறிப்பிடுக. *(2 புள்ளி)*

iii) (a) இப்படத்தில் இலத்திரணியல் கைத்தொழில் பிரசித்திபெற்ற நாடுகள் இரண்டு B மற்றும் C எழுத்தால் காட்டப்பட்டுள்ளன. அவற்றை பெயரிடுக. *(2 புள்ளி)*

(b) இலததிரனியல் கைத்தொழில் பண்புகள் மூன்றை குறிப்பிடுக. *(3 புள்ளி)*

8. i) கீழே காட்டப்பட்டுள்ள படத்தில் C மற்றும் D எழுத்தால் காட்டப்பட்டுள்ள சுற்றுலா வலயங்கள் இரண்டையும் பெயரிடுக. *(2 புள்ளி)*




ii) (a) சுற்றுலா கைத்தொழிலை இந்நாட்டில் விருத்தி செய்வதற்காக அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கை ஒன்றைக் குறிப்பிடுக. *(1 புள்ளி)*

(b) சுற்றுலா கைத்தொழிலால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் இரண்டைக் குறிப்பிடுக. *(2 புள்ளி)*

iii) (a) பின்வரும் பிரதேசங்களில் பரந்துள்ள குடிசைக் கைத்தொழில் எவை என்பதை குறிப்பிடுக.
- பிலிமதலாவ
- வேவல்தெனிய *(2 புள்ளி)*

(b) இலங்கையின் குடிசைக் கைத்தொழிலை விருத்தியடைய்ச் செய்ய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் இரண்டை குறிப்பிட்டு அதில் ஒன்றை விளக்குக. *(3 புள்ளி)*

இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப் பட்டது



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457